1987 ஏப்ரல் 4]

ரூ. 10.00 இலட்சம் தேவைப்படுவதால் போதிய நிதியின்மை காரணமாக இப்பணியை திட்டப் பணியாக எடுத்து செய்ய இயலவில்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் விடுதியில் குடிநீர் வசதி.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் குடிப்பதற்காக வழங்கப்பட்டிருக்கின்ற குடிநீர் மஞ்சள் நிறத்திலே இருக்கின்ற காரணத்தால் அதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் குடிப்பதற்கு அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாக அங்கே பாதுகாக்கப் பட்ட குடிநீர் கொடுப்பதற்காக நம்முடைய குடிநீர் வசதி வாரியம் சம்பந்தப்பட்ட அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்ச ரவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தற்போது தான் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறார்கள். நல்ல குடிநீர் தான் இதுவரை சட்டமன்ற உறுப்பினர் களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாம் சர்க்கார் மாளிகையில் இருக்கிறீர்கள். ஆனால் நான் வாடகை வீட்டில் தான் இருக்கிறேன். ஆகவே சாதாரணத் தண்ணீர்தான் என் வீட்டிற்கு வருகிறது. நல்ல தண்ணீர் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பணி நீக்கம்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடமிருந்து நான் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். கடந்த 1 ஆம் தேதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்ட கல்லூரி